**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

**மானுடவியல் மற்றும் சமூகவிஞ்ஞானங்கள் பீடம்**

**சட்டக்கற்கைகள் திணைக்களம்**

**சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - மட்டம் - 05**

**LLU5712/LWU3315 – பகிரங்க சர்வதேச சட்டம்**

**இறுதிப் பரீட்சை - 2022 / 2023**

**காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்**

**திகதி : 23 மார்ச் 2024** **நேரம்: மு.ப.09.30 - பி.ப.12.30**

**மொத்த வினாக்களின் எண்ணிக்கை எட்டு (08)**

**ஏதேனும் ஐந்து (05) வினாக்களிற்கு மாத்திரம் விடையளிக்குக.**

**தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.**

**01.** ஐக்கிய அமெரிக்காவின் வாஷிங்டனில் 2001 செப்டெம்பர் 11 அன்று இடம்பெற்ற தீவிரவாத தாக்குதல்களுக்கு பின்னர் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபையானது தனது 4370ஆவது கூட்டத்தில் ஐக்கிய நாடுகள் பட்டயத்தின் நோக்கங்களையும் கோட்பாடுகளையும் மீளவலியுறுத்தி தீர்மானம் 1368 இனை ஏற்றுக்கொண்டது. இது தீவிரவாதிகளால் ஏற்படுத்தப்பட்ட சர்வதேச சமாதானத்திற்கும் பாதுகாப்பிற்குமான சகலவகையான சவால்களையும் எதிர்கொள்ள உறுதி பூண்டதுடன், பட்டயத்திற்கு அமைய நாடுகளின் தனியானதும், கூட்டானதுமான தற்பாதுகாப்பை உள்ளார்ந்த உரிமையாக இனம் கண்டது.

நீர் ஒரு சட்டமாணவர் எனக் கருதி **"ஐக்கிய நாடுகளின் பட்டயத்திற்கமைய நாடுகளின் தனியானதும், கூட்டானதுமான தற்பாதுகாப்பு ஒரு உள்ளார்ந்த உரிமை"** என்ற தலைப்பின் மீது பகுப்பாய்வு ஒன்றை எழுதுமாறு கேட்கப்பட்டுள்ளீர். உமது ஆராய்வு பொருத்தமான சட்ட எடுத்துக்காட்டுகள் மற்றும் சர்வதேச சட்டத்தின் சமகால அபிவிருத்திகள் முதலானவற்றை கொண்டு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

(20 புள்ளிகள்)

02. பின்வரும் கூற்றுக்களின் சட்டவலிதுடைமையை பொருத்தமான சட்ட எடுத்துக்காட்டுக்களால் வரையறுக்க.

அ. சர்வதேச தாபனங்கள் சர்வதேச சட்டத்தின் உள்ளடக்கமொன்றாக ஐக்கிய நாடுகள் பட்டயத்தின் கீழ் வழங்கப்பட்ட ஒரு சட்ட ஆளுமையை கொண்டுள்ளன.

(10 புள்ளிகள்)

ஆ. ஐக்கிய நாடுகள் சபை ஆனது தனது உறுப்பு நாடுகளுக்கிடையே சர்வதேச பிணக்குகளை தீர்ப்பதற்கு இராஜதந்திர செயன்முறையை அங்கீகரிக்கிறது.

(10 புள்ளிகள்)

(10+10= 20 புள்ளிகள்)

03. சொம்பியா நாட்டின் பிரஜை ஒருவரான பாயல் என்பவள் அருகிலுள்ள நாடுகளான புங்கா மற்றும் லிங்லான் ஆகியவற்றிலிருந்து மக்கள் உலகின் வேறுபட்ட விருத்தியடைந்த நாடுகளுக்கு புலம்பெயருவதற்கு பணியாற்றுகிறாள். புங்கா மற்றும் லிங்லான் ஆகிய நாடுகள் இரண்டும் உள்நாட்டு யுத்தங்கள் மற்றும் கடுமையான பொருளாதார நெருக்கடிகள் என்பவற்றை தமது ஆட்புலங்களில் சந்தித்துள்ளன. அண்மையில் விருத்தியடைந்த நாடான சைன் அதன் ஆட்புலத்தில் புங்கா மற்றும் லிங்லான் நாடுகளின் 27 பெண்களை அதன் ஆட்கடத்தலிற்கு எதிரான தேசிய செயலாற்றுகையின் போது மீட்டுள்ளதாக அறிவித்தது. இவ்விடயம் தொடர்பில் நடாத்தப்பட்ட விசாரணைக்கு அமைய அவர்கள் தமது நாடுகளிலில் இருந்து சைன் நாட்டிற்கு பாதுகாப்பானதும் நெறிமுறையானதும் சட்டமுறையானதுமான செயன்முறை இல்லாது புலம்பெயர்ந்திருந்தனர். மேலும் இவ் 27 பெண்களும் கணினி விஞ்ஞானம் சார் துறையில் பட்டதாரிகள் என்பதுடன் அவர்களிற்கு தகவல் தொழில்நுட்ப துறையில் வேலைவாய்ப்புகளை வழங்குவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டு, அவர்களிடமிருந்து அதிக பணம் பெற்றுக்கொண்டு புலம்பெயர செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. எவ்வாறாயினும் சைன் நாட்டை அடைந்தபின், இவ் 27 பெண்களதும் கடவுச்சீட்டுகள் பாயலின் முகவர்களால் பறித்து வைக்கப்பட்டதுடன் அவர்கள் தினமும் 18 மணித்தியாலங்களுக்கு மேலதிகமாக போதுமான உணவும் மற்றும் உறக்கமுமின்றி பாலியல் தொழிலாளர்களாக வேலை செய்யும் வண்ணம் சித்திரவதை செய்யப்பட்டனர். இப்பின்னணியில் சைன் நாடானது தனது சட்டத்திற்கமைய வற்புறுத்தப்பட்ட தொழில், பாலியல் அடிமைத்தனம் அல்லது வர்த்தகத்திற்கான பாலியல் துஷ்பிரயோகம் என்பன ஆட்கடத்தல் குற்றமாகும் என்றுரைக்கிறது. மேலும் சைன் நாடானது சொம்பியா நாட்டின் ஒத்துழைப்பை இப்பிரச்சினைக்கு முகம் கொடுக்க நாடுகிறது. சொம்பியா நாடும் அதன் ஆட்புலத்தில் ஆட்கடத்தலிற்காக பாயல் தேடும் குற்றவாளிகளின் பட்டியலில் இருப்பதாக பதிலளிக்கிறது.

மேலுள்ள சந்தர்ப்பத்தில் இருந்து எழுகின்ற தொடர்புடைய நாடுகளின் நியாயாதிக்க அடிப்படையை அவற்றின் சட்ட காரணிகளுடன் விளக்குக. உமது ஆராய்வு பொருத்தமான சட்ட எடுத்துக்காட்டுகளால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

(20 புள்ளிகள்)

04. இலங்கையானது சர்வதேச சட்டத்தையும் அதன் பொருத்தனைகள் சார் கடப்பாடுகளையும் மதிக்கும் ஒரு நாடாக ஐக்கிய நாடுகள் சபையின் சகல பிரதானமான மனித உரிமைகள் தொடர்பான பொருத்தனைகளையும் ஏற்று அங்கீகரித்துள்ளது. இப்பிரதான பொருத்தனைகள், குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளிற்கான சர்வதேச சமவாயம், பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளிற்கான சர்வதேச சமவாயம், பெண்களுக்கெதிரான சகலவகையான பாராபட்சங்களையும் நீக்குதல் தொடர்பான சமவாயம், சித்திரவதை மற்றும் பிற கொடூரமான மனிதாபிமானம் அற்றதுமான கீழ் நடாத்துகை அல்லது தண்டனை என்பனவற்றுக்கு எதிரான சமவாயம், சிறுவர் உரிமைகள் மீதான சமவாயம், சகல புலம்பெயருகின்ற பணியாட்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் உறுப்பினர்கள்

ஆகியோரது பாதுகாப்பு மீதான உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம், வற்புறுத்தப்பட்டு காணாமல் போன சகல நபர்களதும் பாதுகாப்பு தொடர்பான சமவாயம் மற்றும் அங்கவீனமுற்ற நபர்களது உரிமைகளுக்கான சமவாயம் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

மேலே குறிப்பிடப்பட்ட பொருத்தணைகளுள் ஏதேனும் **இரண்டினை (02)** தெரிவு செய்து அவை எவ்வாறு இலங்கையின் சட்டமுறைமைக்குள் உள்வாங்கப்பட்டுள்ளன என்றும், தெரிவு செய்யப்பட்ட பொருத்தணைகளில் இருந்து எழும் கடப்பாடுகளை இலங்கை மதித்து நடைமுறைப்படுத்துவதில் எந்தளவு தூரம் வெற்றி கண்டுள்ளது என்றும் நுணுக்கமாக ஆராய்க.

(20 புள்ளிகள்)

05. ஆலோகா, பூலோகா, திவ்யலோகா மற்றும் சிதாரா என்பன "நங்கா" என அழைக்கப்படும் கடற்பகுதியை பகிர்ந்துகொள்ளும் அயல் நாடுகள் ஆகும். இந்நாடுகள் நங்காவை பயன்படுத்துதல் தொடர்பில் எண்பது வருடங்களுக்கு அதிகமான வரையறுக்கப்பட்ட வழக்கமொன்றை பின்பற்றுகின்றன. இவ்வழக்கத்திற்கமைய ஒரு வருடத்தில் ஒவ்வொரு நாடும் பாரம்பரிய மீன்பிடிக்காக நங்காவை பயன்படுத்த 3 மாத கால அவகாசத்தை பெறுகின்றன. இம்மாதங்களுக்கான ஒதுக்கீடு மற்றும் பாரம்பரிய மீன்பிடித்தலின் மட்டுப்பாடு என்பன எப்போதும் இந்நாடுகளின் மீனவர்களால் மீறப்படவில்லை. 2020 வரை இந்நான்கு நாடுகளிற்கும் அவற்றின் மீனவர்களுக்கும் இடையே ஒரு சமாதானமான வழக்கமும் உறவும் காணப்பட்டது. 2020 இல் இருந்து ஒவ்வொரு வருடமும் இறுதி 3 மாத காலத்தை தனக்கான ஒதுக்கீடாக பெறும் சிதாரா ஆனது காலநிலை மாற்றத்தால் தமது மீனவர்கள் சாதகமாக மீன்பிடிக்க இயலாமையை சுட்டிக்காட்டி இவ்வழக்கத்தை எதிர்த்தது. மேலும் சிதாரா தனது ஆட்புலத்தில் மிகக்குறைந்த இயற்கை வழங்கள் இருப்பதை கருத்தில் கொண்டு கடல்வளத்தை அதற்கு மட்டுமே ஒதுக்கவேண்டுமென குறிப்பிட்டது. உலகளாவிய பெருந்தொற்றுக்குப் பிறகு இந்நான்கு நாடுகளாலும் முகங்கொடுக்கப்பட்ட பொருளாதார நெருக்கடியின் விளைவாக இத்தொடர்புடைய நாடுகளின் மீனவர்கள் மீன்பிடித்தல் தொடர்பான ஒதுக்கீடு குறித்து பிணக்குற ஆரம்பித்ததுடன், இவை தொடர்பில் குற்றங்களும் பதிவு செய்யப்பட்டன. இச்சந்தர்ப்பத்தைக் கருத்திற்கொண்டு ஆலோகா, பூலோகா, திவ்யலோகா ஆகிய நாடுகள் சர்வதேச சட்டத்தின் சட்ட செயன்முறை மூலம் நங்காவின் பயன்பாட்டை வரையறுக்க விரும்புகின்றன. எவ்வாறாயினும் சிதாரா இந்நடபடி முறையில் இணைய மறுப்பதுடன் நங்காவை சமமாக பகிர்வதையும் எதிர்க்கிறது. 2020 இலிருந்து தான் இவ்வழக்கத்தை தொடர்ச்சியாக எதிர்ப்பதாக சிதாரா குறிப்பிடுகிறது.

இந் நான்கு நாடுகளும் ஐக்கியநாடுகள் சபையின் உறுப்பு நாடுகள் எனக் கருதுக.

(அ) நான்கு நாடுகளுக்கிடையேயும் நங்காவின் மீதான உரிமைகளை பிரிப்பதற்கான சர்வதேச சட்டத்தில் காணப்படும் விதிகள் மற்றும் கோட்பாடுகள் தொடர்பில் ஆலோகா, பூலோகா மற்றும் திவ்யலோகா ஆகிய நாடுகளுக்கு அறிவுறுத்துக.

(15 புள்ளிகள்)

(ஆ)பிணக்குகள் தீர்ப்பதற்கான இதே சட்ட செயன்முறையில் நங்காவை சமமாக பகிருவதை சிதாரா வெற்றிகரமாக எதிர்க்க முடியுமென நீர் எண்ணுகிறீரா?

(05 புள்ளிகள்)

(15+05=20 புள்ளிகள்)

06. 1961 ஆம் ஆண்டின் இராஜதந்திர உறவுகளுக்கான வியன்னா சமவாயமானது இராஜதந்திர தூதுவர்களுக்கு வழங்கப்பட்ட விடுபாட்டுரிமையை எடுத்துரைக்கும் அதே சமயம் துணைத்தூதுவர் - கன்சியுலர் (தூதுவராலயத்தில் நிர்வாக விடயங்கள், அனுப்புகின்ற நாட்டின் வர்த்தக அக்கறையின் பாதுகாப்பு மற்றும் விசாக்களை வழங்குதல் முதலானவற்றை மேற்கொள்ளும் தூதுவராலய அதிகாரிகள்) தொடர்பான சட்டமானது 1963ஆம் ஆண்டின் கன்சியுலர் உறவுகள் தொடர்பான வியன்னா சமவாயத்தால் ஆளப்படுகிறது.

(அ)மேற்தரப்பட்ட கூற்றின் அடிப்படையில் இராஜதந்திர தூதுவர்கள் மற்றும் கன்சியுலர் ஆகியோரிடையே பகிரப்படும் விடுபாட்டுரிமை தொடர்பில் காணப்படும் ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் நுணுக்கமாக ஆராய்க. உமது நுணுக்கமான பகுப்பாய்வு ஆனது பொருத்தமான உதாரணங்களால் எடுத்துக்காட்டப்பட வேண்டும்.

(12 புள்ளிகள்)

(ஆ) " இராஜதந்திர விடுபாட்டு உரிமையானது எவ்வாறாயினும் பரிபூரணமானது அல்ல" இக்கூற்றுடன் நீர் இணங்குகிறீரா? 1961 ஆம் ஆண்டின் இராஜதந்திர உறவுகள் தொடர்பான வியன்னா சமவாயத்தில் இருந்து உதாரணங்களை எடுத்துக்காட்டி நுணுக்கமாக ஆராய்க.

(08 புள்ளிகள்)

(12+08=20 புள்ளிகள்)

**பின்வரும் நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு வினா இலக்கங்கள் 7 மற்றும் 8 என்பன ஆராயப்பட வேண்டும்.**

A மற்றும் B ஆகியன கடலோர அயல்நாடுகள் ஆகும். 2002ஆம் ஆண்டில் முடிவுறுத்தப்பட்ட 'பிளாஸ்திக்கை' (Plastic) ஒழிப்பதற்கான சர்வதேச சமவாயம் என்பதற்கு இவ்விரு நாடுகளும் திறத்தவர்களாகும். B நாடானது இச்சமவாயத்தின் 'சர்வதேச பிளாஸ்திக் முகாமைத்துவ சுட்டெண்' பற்றிய உறுப்புரை 11 அதன் மீது பிரயோகிக்கப்படலாகாது என்ற நிபந்தனையின் மீது இதற்கு திறமாக ஆனது. எவ்வாறாயினும் இச்சமவாயத்தை ஆக்குகின்ற செயன்முறையின் போது சமவாயத்தின் இலக்கை அடைவதற்கான ஒரு பொறிமுறையாக சர்வதேச பிளாஸ்திக் முகாமைத்துவ சுட்டெண் காணப்படுமென சுட்டிக்காட்டப்பட்டது. ஏற்று அங்கீகரிக்கப்பட்ட இச்சமவாயத்தை செயற்படுத்துவதற்காக A நாடானது தன்னுடைய நியாயாதிக்கத்தில் பிளாஸ்திக்கினால் ஏற்படுத்தப்படும் மாசினை தடுப்பதற்காக ஒரு தடவை உபயோகிக்கும் பிளாஸ்திக் பாவனைக்கான உற்பத்தி தடை உள்ளிட்ட தேசிய சட்டங்களை

ஆக்கியது. எவ்வாறாயினும் இச்சமவாயத்தின் கீழ் 2023 இல் வெளியிடப்பட்ட சர்வதேச பிளாஸ்திக் முகாமைத்துவ சுட்டெண் வரிசையில் A நாடானது அதன் கடற்கரையோரப் பகுதிகளில் காணப்பட்ட பிளாஸ்திக் மாசின் காரணமாக மிகக் குறைந்த நிலையை பெற்றது. B நாடு ஆனது அதன் வேண்டுகோளின் மீது தரவரிசைக்கு உட்படுத்தப்படவில்லை.

2024 இல் A நாட்டின் தேசிய சுற்றாடல் அதிகார சபை மற்றும் தேசிய விஞ்ஞான அமைப்பு என்பவற்றின் ஒருங்கிணைப்பில் அண்மையில் வெளியிட்ட ஒரு அறிக்கை பின்வருவனவற்றை கண்டறிந்தது;

- A நாட்டின் 87% ஆன கடற்கரையோரமானது பிளாஸ்திக் குப்பைகளால் மாசுற்றுள்ளது. இக்கடற்கரையோரப் பகுதிகளில் சேர்ந்துள்ள பிளாஸ்திக் போத்தல்களில் B நாட்டின் உற்பத்திச் சின்னம் காணப்படுகின்றமை சுட்டிக்காட்டப்பட்டது. இவ்வறிக்கை மேலும் தெரிவிப்பதானது இப் பிளாஸ்திக் குப்பைகள் கடல் எல்லைகளை கடந்துள்ளன.
- கடல் எல்லை விசாரணைகளின் பிரகாரம் A நாட்டின் கடற்கரையோரங்களில் கண்டறியப்பட்ட பெரும்பான்மையான பிளாஸ்திக் குப்பையானது B நாடு அதன் கடல் எல்லையில் அகற்றுகின்றவை ஆகும் என அறியப்பட்டுள்ளது.
- அறிக்கையின் பிரகாரம் A நாடு உட்கொள்ளும் கடலுணவு நுண்ணிய பிளாஸ்திக்குகளை (Microplastic particles) கொண்டுள்ளதாகவும், இதனால் ஏற்படக்கூடிய ஆரோக்கியம் சார்ந்த ஆபத்தை தடுக்க பொதுமக்கள் கடலுணவை உண்ணுதல் ஆகாது. இத்தகு கடலுணவுகளை உட்கொள்வது நுரையீரல் புற்றுநோய், பிறப்புசார் குறைபாடுகள் முதலான ஆரோக்கிய குறைபாடுகளை ஏற்படுத்துகிறது.
- A நாட்டின் பெரும்பான்மையானோரின் உணவும் தொழிலும் கடல் சார்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

A மற்றும் B என்பன ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகள் ஆகும்.

07. மேற்தரப்பட்ட சந்தர்ப்பத்தின் கீழ் 1969ஆம் ஆண்டின் பொருத்தனைகளுக்கான சட்டத்தின் மீதான வியன்னா சமவாயத்தின் கீழ் தொடர்புடைய நாடுகளின் மீது 'பிளாஸ்திக்கை ஒழிப்பதற்கான சர்வதேச சமவாயத்தின்' பிரயோகத்தினை ஆராய்க. உமது விடை பொருத்தமான உதாரணங்களால் எடுத்துக்காட்டப்பட வேண்டும்.

(20புள்ளிகள்)

08. தரப்பட்டுள்ள சந்தர்ப்பத்தின் பின்னணியில் சர்வதேச சட்ட ஏற்பாடுகளின் கீழ் A நாடானது B நாட்டினாலான எல்லை கடந்த சுற்றாடல் மாசிற்காக ஒரு சட்ட நடவடிக்கையை முன்வைக்க விரும்பினால், B நாட்டின் மீது பொறுப்புடைமையை சுமத்துவதற்கான சாத்தியப்பாட்டை ஆராய்க. உமது விடையை பொருத்தமான சட்ட எடுத்துக்காட்டுகளால் ஆதாரப்படுத்துக.

(20புள்ளிகள்)

- முழுப்பதிப்புரிமை பெற்றது -